மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(நண்பகல் 12-00)

(2) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண 20/1981).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1981) ஆய்வு செய்வதற்காக, 27 உறுப்பினர்கள் அடங்கிய (18 சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களும், 9 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு, மேலவை தனது இசைவைத் தெரிவிக்கிறது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்காணும் மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் :—

1. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்.
2. திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து.
3. திரு. எஸ். முத்து.
4. திரு. ஜேப்பியார்.
5. திரு. ம. சங்கரலிங்கம்.
6. திரு. க. இராமமூர்த்தி.
7. திரு. வ. ஆர். தாமோதரன்.
8. திரு. ப. மாணிக்கம்.
9. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1981) ஆய்வு செய்வதற்காக, 27 உறுப்பினர்கள் அடங்கிய (18 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 9 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு, மேலவை தனது இசைவைத் தெரிவிக்கிறது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்காணும் மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் :—

1. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்.
2. திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து.
3. திரு. எஸ். முத்து.
4. திரு. ஜேப்பியார்.
5. திரு. ம. சங்கரலிங்கம்.
6. திரு. க. இராமமூர்த்தி.
7. திரு. ஆ. ஆர். தாமோதரன்.
8. திரு. ப. மாணிக்கம்.
9. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்ட முன்வடிவுகள் 3 முதல் 8 வரை ஒரே பொருள் குறித்து இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாகவே அவற்றைப்பற்றி விவாதிக்கலாம். பின்னர் சட்ட முன்வடிவுகள் தனித் தனியாக அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS